உ

கண்ணங்காரக்குடி எனும்

சாத்தான் கோயில்

திருப்பேரையூர் நாகலிங்க தர்மசாஸ்தா

ஸ்ரீ மகா சாத்தையனார் கோயில்

வரலாற்றாய்வு



பாலாம்பிகை தாசன்

பார்வதி பதிப்பகம்
காரைக்குடி - 3

கண்ணங்காரக்குடி

திருப்பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா கோயில்

(சாத்தான் கோயில்)

ஸ்ரீ மகா சாத்தையனார் கோயில்

வரலாற்றாய்வு

பாலாம்பிகை தாசன்

பார்வதி பதிப்பகம்
11, தையல் நாயகி இல்லம்
சுப்பிரமணியபுரம்,
காரைக்குடி - 630 003.

முதற்பதிப்பு

History of (Sattankoil) Maha Satta Aiyanar Temple

Balambigaidasan

விலை ரூ.7.00

பதிப்புரை

கண்ணங்காரக்குடி (சாத்தான் கோயில்) **"ஸ்ரீ மகா சாத்தையனார் கோயில்"** வரலாறு என்னும் மகிழம் பூ அனைய இச்சிறுநூல் தெய்வ மணம் கமழக் கோயில் வரலாற்றை எடுத்துரைக்கிறது. இத்திருக்கோயில் புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் உள்ள அய்யனார் கோயில்களில் மிகப்பழமையானது. இக்கோயில் சிவன் கோயில் போல வனப்பெலாம் நிறையக் கட்டப்பெற்றிருக்கிறது. இங்கு எழுந்தருளிய அய்யனாரைத் "திருப்பேரையூர் நாகலிங்க சாஸ்தா" என்றே குறிப்பர். அக்கோயில் வரலாற்றை இந்நூல் விளக்குகிறது. இதில் சாத்தையனாரைப் பற்றிய துதிப்பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பேரையூர்ச் சாத்தானின் வரலாற்றை உணர்ந்து துதிப்பாடல்களை ஓதி அனைவரும் பயன்பெற வேண்டுகிறோம்.

வாழ்க வளமுடன்

12-2-99 **சொ.பார்வதி**

காரைக்குடி

முன்னுரை

"ஸ்ரீ மகா சாத்தையனார் கோயில்" என்னும் இந்நூல் அய்யனார் கோயில் வரலாற்றையும் சிறப்பையும் அமைப்பையும் அருள்தரும் ஆற்றலையும் எடுத்துரைக்கிறது. இந்நூலினை என் ஆசிரியப் பெருந்தகை

முதுகுளத்தூர் கவிஞர் பரம்பரை
கவிஞர் கோ-வித்துவான்
பூ. அமிர்தலிங்கனார் எம்.ஏ. அவர்களின்

பொன்னார் திருவடிகளுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்நூலினைப் படித்து அனைவரும் ஸ்ரீ சாத்தையனார் திருவருளைப் பெறவேண்டுகின்றேன்.

அன்பன்
பாலாம்பிகைதாசன்

பாகனேரி அய்யனார் கோயில், இங்கிருந்து கொண்டு செல்லப்பெற்ற கோயிலாம். இதற்குக் கார்ரணமானவர்கள் அழகுபுலி அம்பலம் வகையாறா. அங்கு இவ்வகையினர் இவரைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். கி.பி.1873-லிருந்து 1958-க்குள் மூன்று முறை சாத்தாங் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. 1956 ஜூனில் (வைகாசி 272) குடமுழுக்கு. அண்மையில் (1997)இல் ஒரு குடமுழுக்கு.

வரைபடம்

1. கருவறை
2. மூலவர்
3. அருத்தமண்டபம்
4. கலியாணக்கோல அய்யனார்
5. வாகனம்
6. துவாரபாலகர்
7. உண்டியல்
8. கஜபலிபீடம்
9. கொடிமரம்
10. முன்மண்டபம்
11. மகாமண்டபம்


வட சிறகு

12. சப்தமாதர்கள்
13. வடக்கு வாசல் கருப்பர்
14. மூலை / மூல மலையாண்டி
15. பைரவர்
16. முனிவரர்
17. மண்டகப்படிக் கொட்டகை
18. அலங்கார மண்டபம்

தென் சிறகு

19. பிரமர்
20. அடைக்கலம் காத்த சுவாமி
21. அகோர வீரபத்திர சுவாமி
22. மலையாள பகவதியம்மன்
23. பன்னிவீரப்ப சுவாமி
24. கிணறு
25. மடப்பள்ளி
26. குதிரை
27. யானை
28. பூதம்
29. பாலையடி விநாயகர்
30. செல்வ விநாயகர்

கோயில் வரைபடம்



வடக்கு
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30

கண்ணங்காரக்குடிக் கல்வெட்டு

1. சகாத்தம்
2. சூருள சாயக (1561)
3. இதன்மெல் செ- (இராட்சச ஆண்டு
4. சல்லா நின்- வைகாசி மாதம் 5 ஆம் நாள்)
5. ற ராக்ஷசதளுவை-
6. காசி மீ ருஉ ஸ்ரீ
7. செது திருமலை
8. செதுபதி கா-
9. தத் தெவரவ-
10. ர்கள் தன்மமா
11. க பெரைச்சாத்
12. தாவுக்கு கண்-
13. ணங் காரக்கு
14. டி நஞ்சை புஞ்
15. சையுள் பட செ-
16. ந் தனாங் கெ
17. ல் லையும்
18. குடிபடையு
19. ம் ஊர்

கண்ணங்காரக்குடி என்னும் சாத்தாங் கோயில் சாத்தையனார் கோயில் வரலாறு

ஒன்பது நகரக்கோயிலும் அய்யனார் கோயிலும்

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானை வணங்குவதில் மிகுந்த ஆர்வமுடையவர்கள்; இம்மரபினர் சிவன் கோயில் திருப்பணிகள் செய்வதில் பெரும் பொருளைச் செலவிட்டிருக்கின்றனர். இவர்கள் தங்களுக்குள் திருமணம் நடத்திக் கொள்ள ஒன்பது சிவன் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஒன்பது கோயிலை அடிப்படையாகக் கொண்டே இவர்களின் சமூக நடவடிக்கைகள் அமைகின்றன. இக்கோயில்களில் திருமணத்திற்குப் பாக்கு வைக்கும் போது - திருமண அங்கீகரிப்பாக - திருமண வீட்டிற்கு மணமக்கள் சூடிக்கொள்ள மாலை வரும். இவ்வாறு பாக்கு வைக்கப்போகும் போது, அதற்காகச் செல்லுகின்ற பங்காளி, சுவாமி, அம்மனுக்கு அருச்சனை செய்து வருவார்; இவர்கள் இக்கோயிலுக்குப் புள்ளிவரி, திருவிளக்குக் காணிக்கை போன்றவற்றைத் தவறாது செலுத்துவர்; ஆனால் ஆண்டுதோறும் நகரக் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் செய்வதோ அருச்சனை செய்வதோ வேறு சிறப்பு வழிபாடு செய்வதோ நகரத்தார்களிடம் இல்லை.

சிறு தெய்வ வழிபாட்டின் முதன்மை

நகரத்தார்களிடையே சிவ வழிபாட்டைக் காட்டிலும் சிறு தெய்வங்களான அய்யனார், காளி, கருப்பர் போன்ற சிறு தெய்வங்களை வழிபடுகின்ற பழக்கமே பெரிதாக இருக்கிறது. நகரத்தார்கள் தங்கள் குல தெய்வமான அய்யனார் கோயிலுக்குத்

தவறாது ஆண்டு தோறும் குடும்பத்துடனோ பங்காளிகளுடனோ ஒருங்கு கூடி ஆடி அல்லது தைத் திங்களில் போய் வழிபடுவர்; இதில், புள்ளிக்கு ஒருவர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் ஆகியவற்றால் அய்யனார்க்கு அபிஷேகம் செய்வர்; கருப்பருக்குக் கோழி, சேவல் போன்றவற்றைப் பலியிடுதலுக்கு வழங்குவர். தங்கள் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு அய்யனார் கோயிலிலேயே இவர்கள் பெயர் வைப்பர். சிவன் ராத்திரியின் போது, இவர்கள் தங்கள் குல தெய்வமான அய்யனார் கோயிலுக்கு வந்து சோறு வடித்துப் போடுவதும் குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவதும் வழக்கம். தங்கள் குடும்பப் படைப்புக்கும் பொதுப் படைப்புக்கும் நகரத்தார்கள் இங்கு வந்து தீர்த்தம் எடுத்துச் சென்ற பின்பே படைப்பைத் தொடங்குவர். படைப்பன்று அய்யனார் கோயிலில் நைவேத்தியத்துக்குக் கொடுத்துப் பிரசாதம் வாங்கி அதனைப் படைக்கிற வீட்டில் படைப்புப் பள்ளயத்துடன் வைத்துச்சுவாமி கும்பிடுவர். இவையெல்லாம் நகரத்தார்களின் கோத்திரப் பிரிவான கோயில் வழிபாட்டைவிட அய்யனார் வழிபாட்டை மிகுத்துக் காட்டுவன.

நகரத்தார்களிடம் அய்யனார் அல்லது காளி வழிபாடு, விநாயகர் வழிபாடு போல வாழ்க்கையில் இடம் பெற்ற ஒரு தலையாய வழிபாடாகும். இவர்கள் குலதெய்வமான அய்யனாரை வழிபடவில்லை என்றால் தமக்குத் தொழில் நன்றாக நடக்காது என்றும் குடும்பத்தில் நோய் மிகும் என்றும் அஞ்சுகின்றனர். இதனால் அய்யனாரை வழிபடுவதில் நகரத்தார்கள் என்றும் தயங்குவதில்லை.

அய்யனாரா ? காளியா ?

நகரத்தார்கள், செட்டிநாட்டு எல்லைக்குள் அடங்கிய பல்வேறு அய்யனார் கோயில்களை அல்லது அங்காளம்மனைத் தலைமையாக் கொண்ட கோயில்களைக் குல தெய்வக் கோயிலாக ஏற்று வணங்கி

வருகின்றனர். சிறு தெய்வக் கோயில், அய்யனார் கோயிலாக இருந்தால், அங்கு அய்யனாரே தலைமைக் கடவுளாக விளங்குவார். அது போல அங்காளம்மன் தலைமைக் கடவுளாகக் கருவறையில் திகழ்ந்தால், அங்கு அய்யனார் இருக்க மாட்டார். நகரத்தார் வணங்குகின்ற சிறு தெய்வக் கோயில்களில் இவ்வாறு மூலத்தான கடவுளிருப்பதில் இரண்டு வகையான அமைப்புக் காணப்படுகிறது.

பரிவார தெய்வங்கள்

பரிவார தெய்வங்களில், பல்வேறு பெயருடைய கருப்பர்களும் ஏழுகன்னிமார்களும் அமைந்திருப்பர்; இவர்களுடன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய வீரபத்திரரும் பத்திரகாளியும் பரிவார தெய்வங்களில் இடம் பெற்றிருக்கின்றனர். இவற்றுடன் நகரத்தார்கள், வேளார்களின் படைப்புத் தெய்வங்களுக்கும் சிலைகள் உண்டு. இங்ஙனம், நகரத்தார்கள் இரண்டு வகையாக அமைந்த சிறுதெய்வக் கோயில்களில் ஏதேனும் ஒன்றைக் குல தெய்வக் கோயிலாகக் கொண்டு வணங்குகின்றனர்.

செட்டிநாட்டு எல்லைக்குள் அடங்கிய பல்வேறு அய்யனார் அல்லது அங்காளம்மன் கோயில்களை நகரத்தார்கள் குல தெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். அவற்றில் மிகப் பழமையானவை கண்ணங்காரக்குடி சாத்தையனார் கோயில், நெய்வாசல் திட்டாணிக் கருப்பர் கோயில், இராங்கியம் கருப்பர் கோயில், கீழக்கோட்டை ஆதனமழகிய அய்யனார் கோயில் முதலியனவாகும்.

ஊர்ப் பெயரின் விளக்கம்

கண்ணங்காரக்குடி, புதுக்கோட்டை மாவட்டம், திருமெய்யம் தாலூகா பனங்குடி வட்டத்தைச் சார்ந்தது. கண்ணங்காரக்குடி என்பதுதான் இந்த ஊரின் பழமையான பெயர். இவ்வூரின் பெயர்

காரிக்குடி (காரிக்குடி - அய்யனார் குடியிருக்கும் ஊர்) என்றும் கார்குடி என்றும் வழங்கியது என்பர். இவ்வூரின் பெயர் அரசு ஆவணங்களில் 'கண்ணங்காரக்குடி' என்றே உள்ளது. இவ்வூரில் வாழ்ந்த வேளார் ஒருவரின் பெயர் கண்ணன்; இவரால் இவ்வூருக்குப் புகழ் ஏற்பட்டது. இதனால் இச்சிற்றூர் கண்ணன் கார்குடி என்று பெயர் பெற்றது. பின் 'கண்ணங்காரக்குடி' என்று பெயர் மருவிற்று. எனவே கண்ணங்காரக்குடி பழைய பெயர் என்று ஒரு சாராரும் கண்ணவேளாரால் பெற்ற பெயர் என்று இன்னொரு சாரரும் கருதுகின்றனர். இந்த ஊரில் காணப்படும் கி.பி.1639ஆம் ஆண்டு, திருமலை சேதுபதி காத்ததேவர் கல்வெட்டு, இவ்வூரைக் 'கண்ணங்காரக்குடி' என்றே சுட்டுகின்றது. ஆதலால் இப்பெயர் மிகப் பழமையான பெயராகும். இங்குள்ள அய்யனார் கோயிலில் எழுந்தருளி ஆட்சி புரியும் பெருமான் சாத்தையனார் ஆவார். இவர் புகழ், திக்கெல்லாம் பரவிய புகழ். நாட்டாரும் நகரத்தாரும் மக்களும் இங்குக் கோயில் கொண்டிருக்கும் அய்யனார் பெயராலேயே இந்த ஊரைச் 'சாத்தாங் கோயில்' என்று பிற்காலத்தில் அழைக்கலாயினர். திருப்பெருந்துறையை ஆவுடையார் கோயில் என்றும் திருக்கானப் பேரைக் காளையார் கோயில் என்றும் அழைக்குமாறு கண்ணங்காரக்குடியும் சாத்தாங் கோயிலாயிற்று.

பேரையூர்ச்சாத்தன் வருகை

கண்ணன் என்ற வேளார், கண்ணங்காரக்குடி என்ற கண்ணபுரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் அய்யனாரை வழிபடு கடவுளாகக் கொண்டு வணங்குகின்ற பேரார்வமுடையவர்; இவர் வாழ்ந்த இந்த வட்டாரத்தில், அய்யனார் கோயிலே கிடையாது; ஆகையால் இவர் நச்சாந்து பட்டிக்கு அருகிலுள்ள பேரையூருக்கு நடந்துசென்று அய்யனாரை வழிபட்டு வந்தார். வயது முதிர முதிரக் கண்ண வேளாரால், அத்தனை தொலைவு நடந்து சென்று அய்யனாரை வணங்கி வர இயலவில்லை. அதனால் மனம் வருந்தி

மிகுந்த துயரத்தொடு வீட்டில் படுத்துக்கிடந்தார்; அவ்வாறு இருந்தவர் அவர் அறியாமலே துயின்று விட்டார்.

துயின்றவர் கனவில், கண்ணங்காரக்குடி, பாலையடி விநாயகர் தோன்றிப் 'பேரையூர்க்குச் சென்று திரு நீற்றுப்பை, உருத்திராக்கம், பிரம்பு முதலியவற்றை எடுத்து வந்து இங்குப் பிரதிட்டை செய்து பேரையூர்ச் சாத்தனை வணங்கு' என்று அருளிச் செய்தார். தள்ளாத காலத்தில் நிலையாக ஒரு வழியை இறைவன் காட்டினாரே என்ற மகிழ்ச்சியுடன், பாலையடி விநாயகர் அருளிய வண்ணமே, கண்ணவேளார் செய்தார். (பிடிமண் எடுத்து வந்து கோயில் கட்டுவது என்ற மரபை இது நினைவூட்டுகிறது) இவ்வாறு 'பேரையூர்ச் சாத்தனார்' கண்ணங் காரக்குடியில் கோயில் கொண்டருளினார். கண்ணங்காரக்குடி வேளார்களின் பழைய ஊர்தேக்காட்டூர், தேக்காட்டூர், பேரையூர்ச் சிவன் கோயிலுக்கு அடிமைப்பட்ட ஊர். எனவே இதனாலும் பேரையூர்த் தொடர்பு மெய்யாகிறது.

கண்ணங்காரக்குடியில் எழுந்தருளிய சாத்தையனார், பேரையூரிலிருந்து வந்தமையால் இவரைப் 'பேரையூர்ச் சாத்தா' என்று அழைக்கலாயினர். இவ்வழக்குக் கி.பி.1639இல் இருந்திருக்கிறது. காலம் போகப் போக இந்தக் காரணப் பெயர்கள் மறைந்து, உண்மைப் பெயர்களே நிலைக்கும். பேரையூர்ச் சாத்தா என்ற பெயர் மறைந்து சாத்தனார் என்ற பெயரே வழங்கலாயிற்று. ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் 'பேரையூர்ச் சாத்தா' என்று காரணப் பெயருடன் வழங்கியது என்று கொண்டால், கண்ணங் காரக்குடிக் கோயில் கி.பி.1590ஐ ஒட்டி ஏற்பட்டிருக்கலாம். (நெடுங்குடி கைலாச நாதர் கோயில் கல்வெட்டில் (பு.ச.க.767) கண்ணங் காரக்குடி என்ற பெயர் காணப்படுகிறது).

தெய்வங்களின் இடப்பெயர்ச்சி

பேரையூரிலிருந்து அய்யனார், கண்ணங் காரக்குடிக்குக்

கொண்டு வரப்பட்டிருக்கிறார் என்ற வரலாறு உண்மையானதேயாகும். இது தெய்வங்களின் இடப் பெயர்ச்சியை உணர்த்துகிறது. செட்டி நாட்டிலும் பிற பகுதிகளிலும் தெய்வங்கள் இடம் பெயர்ந்த வரலாறுகள் பல காணப்படுகின்றன. ஆண்டு தோறும் திருப்பதிக்குச் சென்று வந்த செட்டியார், தனக்கு வயது முதிர்ந்த காலத்தில், திருப்பதிக்குப் போக இயலவில்லையே என்று வருந்தியிருந்தபோது பெருமாளே கருணை செய்து அரியக்குடி சீனிவாசப் பெருமாள் கோயிலைக் கட்டி வழிபடுமாறு அருள் செய்தார். இதனால் அரியக்குடிப் பெருமாள் கோயில் உருவானது. சபரிமலை அய்யப்பனுக்குத் தமிழகமெங்கும் அய்யப்பன் கோயில்கள், அதே அமைப்பில் கட்டப்பட்டு வருவதும் இங்கு நினைக்கத்தக்கது.

தென்னிளசைப் பதி என்றும் பழையூர் என்றும் கோவிற்பட்டி என்றும் அழைக்கப் பெறுகின்ற அருள்மிகு பெத்த பெருமாள், காடேரி அம்மன் கோயில், மயிலாடுதுறை அருகிலுள்ள வழுவூர் பெத்தாரண்ண சுவாமி பெரியாச்சி ஏன்ற தெய்வங்கள் இடம் பெயர்ந்து வந்து குடி கொண்ட கோயிலாகும். இத் தெய்வத்தையும் ஒரு வேளாரே கொண்டு வந்தார். சிராவயலிலுள்ள திருமேனிக் கருப்பரும் மலையாளத்திலிருந்து கொண்டு வரப்பட்டவர். இவ்வாறு தெய்வங்களை ஒரூரிலிருந்து இன்னொரு ஊருக்குக் கொண்டு வருவது இயல்பாகும். அவ்வாறு தான் கோயில்கள் பெருகின.

'பேரையூர்ச் சாத்தன்' பேரையூரில் எங்கிருந்தார் என்பது ஆராயத் தக்கது. இப்பெருமான், பேரையூர் நாகநாத சுவாமியுடன் தொடர்புடையவராய் அங்கிருந்து வந்த வராகையால் இவரை 'நாகலிங்க சாஸ்தா' என்றும் 'நாகலிங்க தர்ம சாஸ்தா' என்றும் பெயரிட்டழைக்கின்றனர். பேரையூர்ச் சிவன் கோயிலான நாக நாத சுவாமி கோயிலில், கண்ணங்காரக்குடியின் சாத்தையனார் தொடர்பைக் காட்டுகின்ற சான்றுகள், கதைகள், கல்வெட்டுக் குறிப்புகள் ஏதும் கிட்டவில்லை.

இச்சிவன் கோயிலில் ராகு தொடர்பான வழிபாடு மிகுதியாக நடைபெறுகிறது. மக்கட்பேறு வேண்டியும் திருமணம் நிகழவும் பேரையூர்க்கு வந்து வழிபடுவோர் எண்ணிக்கை அளவிலடங்காது. ராகுவின் தொல்லைகளைப் போக்கவும் வம்ச பரம்பரை வளரவும் ஆடு மாடு முதலிய செல்வங்கள் பெருகவும் அய்யனார் வழிபாடு உரியது. அய்யனார் வழிபாட்டின் இந்த அம்சம் பேரையூர்ச் சிவன் கோயிலில் சிறந்திருத்தலால், கண்ணவேளார் அங்கிருந்து பிடிமண் எடுத்துச் சாத்தையனாரை உண்டாக்கியிருக்கின்றார். பேரையூர் நாக நாத சுவாமி வழிபாடு, வேளாரால், சிறு தெய்வ வழிபாடாகக் கண்ணங்காரக்குடியில் மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது.

சிவன் கோயிலும் அய்யனாரும்

இம் மாதிரி வேறு எங்காவது சிவன் கோயிலுக்கும் அய்யனார் கோயிலுக்கும் தொடர்பிருக்கிறதா? எல்லாச் சிவன் கோயில்களுக்கும் அவ்வூரில் தொடர்புடைய ஒரு சிறு தெய்வக் கோயிலுக்கும் உறவுண்டு; பெரும்பாலும் இச்சிறு தெய்வக் கோயில், சிவன் கோயிலுக்கு வடபுறம் அமைந்திருக்கும். இந்தச் சிறு தெய்வக் கோயிலின் திருவிழா முடிந்த பின்னரே, சிவன் கோயிலில் திரு நாளுக்குக் காப்புக் கட்டுவர்; சிறு தெய்வக் கோயிலின் உற்சவர் திருமேனி, சிவன் கோயிலிலேயே பரம்பரையாக இருந்து வரும். இதனால் பெருந்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் மக்களிடையே இணைந்து வளர்ந்தமை அறியப்பெறும். இவ்வொற்றுமை உயர்ந்த சாதியாரையும் தாழ்ந்த சாதியாரையும் வேற்றுமை இன்றிப் பாவிக்கவும் சிறுதெய்வ வழிபாட்டை மக்கள் ஏற்றுக் கொள்ளவும் துணையாயிற்று.

புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூரில், வம்சோத்தாரக நாதர் திருக்கோயிலுள்ளது. இக்கோயிலுக்கு வடபுறம், 'மலையாமருங்கர்' என்ற அய்யனார் கோயில் திகழ்கின்றது. இந்த அய்யனார் இங்கிருந்து

வேறாகப் பிரிந்து சென்றவர் என்று கூறுகின்றனர். இந்தப் பழைய தொடர்பு காரணமாக, சித்திரா பௌர்ணமி அன்று மலையாமருங்கர், தேரில் சிவன் கோயில் வாசலுக்கு வருவார்; அன்று சிவன் கோயில் சிவாச்சாரியார்கள் அய்யனாருக்குப் பூசை செய்து நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வர். இச்சிவன் கோயிலை வழிபடுவோர் அனைவரும் முதற்கண் மலையாமருங்கரை வழிபட்டபின்பே சிவனை வணங்குகின்றனர்.

பெருங்களூர்ச் சிவன் கோயிலிருந்து மலையா மருங்கராகிய அய்யனார் வழிபாடு தனியே பிரிந்து சென்றது போன்று பேரையூரிலிருந்து கண்ணங்காரக் குடிக்குச் சாத்தையனார் போயிருக்கிறார். பெருங்களூர், பேரையூர் இரண்டு சிவன் கோயில்களும் இராசராசன் காலத்தவை; இரண்டும் வழிபட்டோருக்கு ஆண் மக்கள் பேற்றைத் தரக்கூடியன; நோய் போக்கி நலம் தருபவை. கண்ணங்காரக்குடிச் சாத்தையனார் கோயிலில் மிக அழகான மூன்று யானைச் சிலைகள் சுதை வடிவில் காட்சி தருகின்றன. நகரத்தார்களுக்குச் சொந்தமான அய்யனார் கோயிலில், சுதை வடிவில் யானைகளும் பூதங்களும் காணப்படுவது இங்கு மட்டும் தான். அதுபோல மலையா மருங்கர் கோயிலில் வேண்டுதலாக நிறைய யானைகள் வடிக்கப்பட்டுக் கம்பீரமாக நிற்கின்றன. இவற்றை எழுப்பியவர்களும் புதுக்கோட்டை வட்டாரத்தைச் சேர்ந்த நாட்டுக் கோட்டையாரல்லாத செட்டியார்களே.

அய்யனார் கோயிலுக்கு முன் 'சேமங்குதிரை' என்ற பரியும் குதிரைகளை அமைப்பதுதான் பரவலான நடைமுறை. யானை அய்யனாருக்குரிய வாகனம் என்றாலும், யானையைச் சுதை வடிவில் கோயிலுக்கு வெளியே அமைப்பதில்லை. இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கும் போது, பேரையூர்ச் சிவன் கோயிலிலிருந்து கண்ணங்காரக்குடி சாத்தையனார் வழிபாடு தோன்றியது என்று அறிய முடியும்.

கோயிலின் பழைய வரலாறு

பேரையூர்ச் சாத்தா வருவதற்கு முன் இக்கோயில் மரங்களும் கொடிகளும் அடர்ந்த கொம்படி ஆலயமாகப் பிரம்மருக்குரியதாகிப் பின் திருவுருவம் நிறுவப்பெற்றது. இந்தப் பிரமர் ஐயனார் தோற்றத்துடன் கையில் பிரம்புடன் 'தடி கொண்ட அய்யனார்' என்று பெயர்பெற்றுத் திகழ்கின்றார். பிரம்மர் ஆலயத்தை ஒட்டிய பண்ணி வீரப்ப சுவாமி கருவறை கோயில் வெளி மதிலை ஒட்டியே அமைக்கப்பட்டிருக்கிறது. பேரையூர்ச் சாத்தாவைக் கொண்டு வந்த வேளார், பாலையடி விநாயகர், பிரமர் உள்ள ஆலயத்திலேயே இவரையும் வைத்து வழிபட்டிருக்கிறார். நாளடைவில் பூசை செய்து வந்த தேக்காட்டூர் வேளார் மரபினர், பேரையூர்ச் சாத்தாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி அவர்க்கு முதன்மை கொடுக்கலாயினர். இவ்வாறு பிரமருக்குரிய முதன்மை சாத்தையனார்க்குரியதாயிற்று. இங்குள்ளது போலப் பிரமர், பன்றி வீரன் ஆலயங்கள் இரண்டு அருகருகே புதுக்கோட்டை மாவட்டம் கீழத்திருமாவிலுள்ளன. இவை புராதனமாக உள்ள ஆலயங்கள், பழைய மரபு குன்றாமல் அப்படியே இவை இன்றும் விளங்குகின்றன. இங்கு உருவச்சிலைகள் இல்லை. இக்கோயிலுடன் சாத்தாங்கோயிலை ஒப்பிடும் போது, சாத்தையனார் திருக்கோயில் எவ்வாறு உருவானது என்று அறியமுடிகின்றது.

சேதுபதி தொடர்பு

இக்கோயிலுக்கு இராமநாதபுரம் திருமலை சேதுபதி காத்த தேவர், கண்ணங்காரக்குடி நஞ்சை புஞ்சை உட்பட்ட சேர்ந்த நான்கெல்லை, குடி, படை, ஊர் ஆகியவற்றை வழங்கியிருக்கிறார் (பு.சக.871). இக்கல்வெட்டு, தேரடிக்கு அருகில் ஒரு கல்லில் காணப்படுகிறது. இராமநாதபுரம் சேதுபதிக்கு உடல் நலமின்றி இருந்ததாகவும் அந்நோயைச் சாத்தையனார் கோயிலிலுள்ள மூலி மலையான் தீர்த்ததாகவும் கூறுகின்றனர். இராமநாதபுரம் அரண்மனை சென்று நோய் தீர்த்த மூலிமலையான் என்ற தெய்வம் திரும்பி

வரும் போது அங்கிருந்த 'வன சங்கிலி' என்ற பேயையும் தன்னோடு அழைத்துக் கொண்டு வந்துவிட்டது. அதனாலேயே இந்த ஊரையும் சேர்ந்த நான்கெல்லையையும் திருமலை ரகுநாத சேதுபதி வழங்கினார் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் கல்வெட்டில், நிலக்கொடை செய்தமை உள்ளதே அன்றிப்பிற குறிப்புகள் கிடையாது. நோய் நீக்கியது உண்மையாயின் சேதுபதி கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும். இந்த வட்டாரத்தில் இன்னும் சில அய்யனார் கோயில்களுக்குச் சேதுபதிகள் கொடை வழங்கியிருக்கின்றனர்.

வழிபடும் நகரத்தார்கள்

சாத்தையனார் கோயிலைக் குல தெய்வக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்ற நகரத்தார்கள் 1) இராயவரம் வெ.மு. வகையைச் சேர்ந்த மாத்தூர் அரும்பாக்கூர் நகரத்தார்கள் 2) இராயவரம், கடியாபட்டியைச் சார்ந்த வயிரவன் கோயிலார் 3) கண்டவிராயன் பட்டி வயிரவன் கோயில் - பெரிய வகுப்புப் பங்காளிகள் 4) புதுப்பட்டி - வயிரவன் கோயிலார் 5) காரைக்குடி, தேவகோட்டை நடராசபுரம் சூரக்குடிக் கோயிலார் 6) பள்ளத்தூர் - சூரக்குடிக் கோயிலார் 7) நேமத்தான்பட்டி இலுப்பைக்குடிக் கோயிலார் 8) புதுப்பட்டி - இளையாத்தக்குடி - பட்டணசாமியார் 9) கானாடுகாத்தான் இளையாத்தக்குடி பட்டண சாமியார் 10) மகிபாலன்பட்டி, வலையபட்டி, வேகுப்பட்டி முதலிய ஊரிலுள்ள நகரத்தார்கள் சிலர் - (கோயில் பிரிவு தெரியவில்லை)

சாத்தையனாரின் செல்லப் பிள்ளைகள்

இக்கோயிலில் எந்த நிகழ்ச்சியானாலும் திருப்பணியானாலும் இராயவரம் வெ.மு. குடும்பத்தார் தான் தொடங்கி வைக்க வேண்டும். அவர்கள் முயற்சியால் எல்லாம் நலமாகவும் வளமாகவும் நிறைவேறும். அந்த வகையில் பண்ணி வீரப்ப சுவாமி, சாத்தையனார்க்குச் செல்லப் பிள்ளைகளாக வெ.மு. குடும்பத்தார் விளங்கிவருகின்றனர்.

அவர்களும் இக்கோயிலில் பேரீடுபாடு காட்டி வணங்கி வருகின்றனர். வெ.மு. குடும்பத்தொடர்பால், புதுக்கோட்டை இராமச்சந்திர தொண்டைமான் கால முதலாகச் சாத்தையனார் கோயில் புதுக்கோட்டை மன்னர்களின் குல தெய்வக் கோயிலாகவும் அமைந்திருக்கிறது. இதனை இராயவரம் சுப. பெரியணன் செட்டியார் தாம்பாடிய சாத்தனார் துதியில்

"வேர்கொண்ட புதுவைநகர் ராமச்சந்த் ரேந்திரன்
விரும்பியே போற்று கின்ற
மேதினிவ ணங்குசாத் தையன்" (2 : 4)

என்று போற்றுகின்றார். இவ்வாறு மன்னர்க்கும் மன்னர் பின்னோர்க்கும் உரிய கோயிலாக இச்சாத்தையனார் கோயில் திகழ்கின்றது.

கோயிலமைப்பு

சாத்தையனார் கோயிலில் கருவறை, அருத்த மண்டபம் என்ற பகுதிகள் அழகுற அமைந்திருக்கின்றன. கருவறை சதுரமானது; விமானமும் சிறியது. கருவறையில் பூரணி, புட்கலை என்ற இரு தேவியருடன் சாத்தையனார் எழுந்தருளியிருக்கின்றார். சாத்தையனார், வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கி ஆசனத்தின் மீது ஊன்றி அமர்ந்த கோலத்தில் உத்குடிகாசனத்தில் வீற்றிருக்கிறார். அவருடைய வலக்கையில் செண்டாயுதம் விளங்க இடக்கை குத்திட்டு இருக்கும் முழங்கால் மீது படிந்திருக்கிறது. அய்யனார் புன்னகை தவழும் தோற்றத்துடன் காட்சிதருகின்றார்.

கருவறைக்கு முன்னுள்ள அருத்த மண்டபம் நான்கு தூண்களுடன் கட்டப்பட்டிருக்கிறது. இது சிவன் கோயிலிலுள்ள சபாமண்டபத்தைப் போன்றது. சபா மண்டபத்தில் நடராசப் பெருமான் இருக்குமாறு போல இங்கு அய்யனார் திருமணக் கோலத்தில் உற்சவ மூர்த்தியாக வீற்றிருக்கின்றார்; இவருடன் விநாயகர், அஸ்திரதேவர் ஆகியோரும் உள்ளனர்.

இம்மண்டபத்தின் நடுவில், அய்யனாரை எதிர் நோக்கிய வண்ணம் யானைவாகனம் விளங்குகிறது. கருவறையின் வெளிப்பகுதி, சிவன் கோயில் கருவறை போல வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. கோயிலின் முன் மண்டபமும் மகா மண்டபமும் செம்மையாகக் கட்டுப்பட்டுள்ளன. முன் மண்டபத்தில், எண்பட்டை வடிவத் தூண்கள், இருபத்தெட்டு அணி செய்கின்றன. முன் மண்டபமும் மகா மண்டமும் இணையுமிடத்தில் நான்கு தூண்களையுடைய சிறிய மண்டபம் காணப்படுகிறது. அய்யனார் கருவறைக்கு முன்னுள்ள வெளிப்பகுதிகள், வெவ்வேறு காலங்களில் திருப்பணி செய்யப்பெற்று இணைக்கப் பெற்றமையை வெவ்வேறு வகையான மண்டப அமைப்புகள் உணர்த்துகின்றன.

கருவறைக்கு எதிரே மூன்று பலி பீடங்களும் இரண்டு யானைகளும் இடம் பெற்றிருக்கின்றன. அங்குள்ள கொடிமரம் செப்புத் தகடால் வேயப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு நான்கு கால்களையுடைய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் நூற்றுக்கு மேற்பட்ட தூண்கள் காணப்படுகின்றன; இவற்றின் அடிப்பகுதியில் சதுரப்பட்டை உள்ளது. இந்தப் பட்டையில் தெய்வங்கள், மக்கள், பசு, குதிரை, யானை போன்ற அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன.

பரிவார தெய்வங்கள்

பரிவார தெய்வங்களுக்கு அய்யனார் கோயில்களில் தனிமதிப்புக் கொடுத்துக் கருவறை கட்டுவதில்லை; இந்த அய்யனார் கோயிலில் எல்லாப் பரிவார தெய்வங்களும் மிக சிறப்பான முறையில் கருவறை, முன் மண்டபம், விமானம் ஆகியன அமைக்கப் பட்டிருக்கின்றன. எந்தப் பரிவார தெய்வத்தின் கருவறையும் சாத்தையனார் கருவறையுடனோ அக்கருவறைமுன் மண்டபத்துடனோ இணைக்கப் பெறவில்லை. இந்த அமைப்பின் மூலம் சாத்தையனார்

தலைமையுடையவராக - தனி மதிப்புடையவராகக் - காட்டப் பட்டிருக்கிறார். பரிவார தெய்வங்களுக்கு அய்யனார் கருவறைக்குத் தென்புறமும் வடபுறமும் சந்நிதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலான அய்யனார் கோயில்களில் பரிவார் தெய்வங்கள் அனைத்தும் கோயிலின் தென் சிறகிலேயே கட்டப்பட்டிருக்கின்றன; இந்தத் தெய்வங்கள், வடக்கு நோக்கியிருக்க வேண்டும் என்பதால் இம் மரபு பின்பற்றப்பட்டிருக்கிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமான மக்களைத் திருக்கோயிலின் தென் சிறகிலேயே நிறுவுகின்றனர். மண்ணுலகில் செயற்கரிய செய்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருவுருவச் சிலைகளைச் சிவன் கோயில் தெற்குச் சிறகில் நிறுவியுள்ளமை இதனைக் காட்டும். ஆனால் சாத்தையனார் கோயிலில் தெற்குச் சிறகிலும் வடக்குச் சிறகிலும் பரிவார தெய்வங்கள் எழுந்தருளியிருக்கின்றன.

தென் சிறகுத் தெய்வங்கள்

தென்புறம் கோயில் கொண்டிருக்கும் தெய்வங்கள் பன்னி வீரப்ப சுவாமி, மலையாள பகவதி, அகோர வீரபத்திரர், அடைக்கலங்காத்தார், பிரம்மர் என்போராவர்.

பன்றி வீரன்

பன்னி வீரப்ப சுவாமி (பன்றி வீரன்) புதுக்கோட்டை வட்டாரத்தில் பெரிதும் கொண்டாடப்படுகின்ற தெய்வமாவார்; புதுக்கோட்டைப் பகுதிக்குப் 'பன்றி நாடு' என்று ஒரு காலத்தில் சிறந்த பெயர் வழங்கியது. இப்பகுதியில் மக்களுக்கு நன்மை செய்த சிறந்த வீரன் இருந்தான். இவன் செயற்கரிய செய்து போரிலோ பிறவாறோ அகால மரண மடைந்து தெய்வமாகிவிட்டான். இவனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்போ இலக்கியக் குறிப்போ கிடைக்கவில்லை. 'மதுரை வீரன்' போல இந்த வீரனும் இந்த வட்டாரத்தில் 'பன்றி

வீரன்' என்று கொண்டாடப்படுகின்றான். இவன் இயற்பெயரோ குடும்பச் செய்திகளோ தெரிந்தில.

திருமெய்யம் தாலுகா கண்ணனூர் வட்டத்தில் 'திருமா' என்று ஓர் ஊர் உண்டு; இங்குப் பிரம்மர், பன்றிவீரன் ஆலயங்கள் இருக்கின்றன. இவை கொம்படி ஆலயங்கள்; இவற்றில் வெயில் நுழைய முடியாது, குயில் நுழைய முடியும். பன்றி வீரனுக்குக் கீழத்திருமாவில் இருக்கும் ஆதிதிராவிடர் (பறையர்) களே பூசையிடுவர். இவர் இன்றும் கண் கண்ட தெய்வமாகத் திகழுகின்றார். இவர்க்குப் பன்றியைப் பலியிட்டுப் பூசையிடுகின்றனர். இப்பூசையில் பறையரன்றி வேறுயாரும் கலந்து கொள்வதில்லை. மிகப்பழமையான மரபுகளான இவையனைத்தும் கண்ணங்காரக் குடியில் விடப்பட்டு மாற்றம் பெற்றுவிட்டன.

இங்குப் பன்னி வீரப்ப சுவாமிக்குக் கருவறையும் உருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன; திருமாவைப் போல இவ்வூரிலும் ஆதி திராவிட மக்கள் வழிபடுதலும் போதைப் பொருள்களைப் படைத்தலுமுண்டு. எனினும் பன்றி பலியிடும் வழக்கமில்லை; அனைவரும் கூடி, கோழி, கிடாய் போன்றவற்றைப் பலியிட்டு வருகின்றனர். இப்பூசையில் அனைவரும் பங்கு பெறுகின்றனர்.

பன்னி வீரப்பசுவாமி, இரண்டு கைகளுடன் குதிரையில் அமர்ந்தவாறு விளங்குகிறார்; வலக்கையை ஓங்கியவாறு அரிவாளுடன் காணப்படுகிறார். இடக்கை அதற்கேற்பத் தொங்கியவாறு காணப்படும். இவருக்கு வலது பக்கம் காவனூர்க் காளியும் இடதுபக்கம் கருவப்பிளான் காளியும் இருப்பர். மதுரை வீரன் குதிரையில் தோன்றும் காட்சிபோல இவ்வுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அய்யனாருடைய பரிவார தெய்வங்களில், கருவறைக்குள் எந்தத் தெய்வத்தையும் ஊர்தியுடன் அமைப்பதில்லை; ஆனால் இங்குப் பன்னி வீரப்ப சுவாமி மட்டும் இதற்கு விதிவிலக்கு.

ஒரு காலத்தில் கருவறை இல்லாமல் அமைக்கப்பட்டுப் பின்னர் கருவறை அமைக்கப்பட்டமையால் இம்மாற்றம் ஏற்பட்டது போலும். காவனூர், கருவப்பிளான் என்பன ஊர்ப் பெயர்கள், அவ்வூர்த் தொடர்புடைய காளிகள் என்பது பெயரால் விளங்கும்.

மலையாள பகவதியும் வீரபத்திரரும்

பன்னி வீரப்ப சுவாமியை அடுத்து மலையாள பகவதி உள்ளாள்; இவர்கள் வரிசையாக எழுவராக இருக்கின்றனர். இவ்வமைப்பு சத்தமாதர் வழிபாட்டின் எச்சமாகும். இவருக்குக் கிழக்கே காட்டேரியம்மனும் அழகு நாச்சியம்மனும் உள்ளனர். தென்னிளசை என்ற கோவிலூரின் சிறந்த தெய்வம் காட்டேரி; அவள் இங்குப் பரிவார தெய்வம்.

மலையாள பகவதியை அடுத்து அகோர வீரபத்திரசுவாமி வடக்கு நோக்கியிருப்பார். இவருக்கு எட்டுக் கைகள்; காலடியில் அசுரன் உடல், இவருக்குக் கிழக்கே, வெளிப்பக்கத்தில் மூவேந்தர், வாணாதிராம வேளார், லாட சந்நியாசி, ஆஞ்சநேயர் ஆகிய சிலைகள் உள்ளன. மூவேந்தர் சிலை சேர, சோழ, பாண்டியரைக் குறிப்பதா? முத்தரையரைக் குறிப்பதா? என்று தெரியவில்லை. அய்யனார் கோயில்களில் மன்னர் தொடர்பான உருவச் சிலைகள் காணப்படுவதுண்டு. அந்தப் போக்கே, இந்தச் சிலைகளாக விளங்குகின்றன.

இவரையடுத்துத் தென்மேற்கு மூலையில் அடைக்கலம் காத்தார் சுவாமி, கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். இவருக்கு இரண்டு கைகள், இவர் கருவறைக்கு வெளிப்புறம் தென்திசையில் சின்ன ஆண்டியும் வடதிசையில் பெரிய ஆண்டியும் காணப்படுகின்றனர். இவர்கள் அடைக்கலம் காத்தார் சுவாமியின் துவார பாலகர்கள் ஆவார்.

சாத்தையனார் கருவறைக்குத் தென்மேற்கு மூலையில், சுவரை ஒட்டிப் பிரம்மர் சிலை இருக்கிறது. இவருக்கு இருபுறமும் விநாயகர் திருமேனிகள்; இவர்களுக்கு எதிரில் இருபுறமும் ஐந்தும் நான்குமாக ஒன்பது நாகர்கள் உள்ளனர்.

வடசிறகுத் தெய்வங்கள்

திருக்கோயிலின் வடக்குச் சுற்றில் சப்த மாதர்கள், வடக்கு வாசல் கருப்பர், மூலை மலையாண்டி, வயிரவர், முனீசுவரர், காளி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். சப்த மாதர்க்கும் வடக்கு வாசல் கருப்பர்க்கும் தனித்தனிக் கருவறைகள் கிழக்கு நோக்கியாங்கு உள்ளன. இவர்களை அடுத்து மூலை மலையாண்டி, வயிரவர், முனீசுவரர், காளி ஆகியோர் உள்ளனர். சப்த மாதர்கள், வடக்கு வாசல் கருப்பர் ஆகிய இருவருக்கும் தனித்தனிக் கருவறை உண்டு. இவர்கள் கிழக்கு நோக்கி வீற்றிருக்கின்றனர். இவர்களை அடுத்து மூலை மலையாண்டி, வயிரவர் ஆகியோர் தனித்தனிக் கருவறைகளில் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றனர். மூலிமலையான், மூலமலையாண்டி என்பன ஒரு தெய்வத்தையே குறிக்கின்றன.

மூல மலையாண்டியே, இராமநாதபுரம் சேதுபதி மன்னர் நோய் தீர்த்தவர்; மூலிகைமலை ஆண்டியே மூல மலையாண்டியாக மருவி வழங்குகிறது. மலையாண்டி என்பது மலையில் ஆண்டியாக விளங்கும் முருகனையே சுட்டும்; அவர் நோய் போக்கி உடலைக் காப்பவர். இவருக்குப் பண்டார பூசை இடப்படுகிறது. மூலைமலையான், வயிரவர் சந்நிதிகளில் சதாசேவைச் சிற்பங்கள் உள்ளன. இவையார் என்பது தெரியவில்லை. இவர்கள் திருக்கோயிலுடன் தொடர்புடைய வேளார் மரபினராதல் வேண்டும்.

பொற்பனைக் கோட்டை, புதுக்கோட்டைக் கருகிலுள்ள ஒரு கோட்டை; இக்கோட்டை பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டது; பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே சிதைந்து

போய்விட்டது. இன்றும் இக்கோட்டையின் அழிவுப் பகுதிகளைக் காணமுடிகிறது. இங்குப் பாணர் தலைவன் (வாணர் தலைவன்) ஒருவன் ஆண்டான். இக்கோட்டையின் பக்கத்தில் ஒரு பனைமரம் இருந்தது என்றும் அதுபொன் பழங்களைக் காய்த்தது என்றும் அந்த அடிப்படையில் இக்கோட்டை பொற்பனைக் கோட்டை என்று பெயர் பெற்றது என்றும் பொன் பரப்பினான் கோட்டை என்பதே பொற்பனைக் கோட்டை என்று ஆயிற்று என்றும் கூறுவதுண்டு.

இங்கு வாழ்ந்த வீரனே - பாணர் தலைவனே - தெய்வமாக்கப்பட்டிருக்கிறான். இத்தெய்வத்தைப் புதுக்கோட்டைப் பகுதியில் 'பொற்பனையான்' என்னும் பெயரால் வழிபட்டு வருகின்றனர்; புதுக்கோட்டை நகரில், பொற்பனையான் சந்து என்ற குறுக்குத் தெருவில் பொற்பனையான் கோவில் ஒன்றுள்ளது. பொற்பனைக் கோட்டையிலிருந்த முனி, புதுக்கோட்டை மன்னர்க்குத் தொல்லைதந்து வந்ததாம்; அதனை அடக்க மன்னர் கண்ணாங்காரக்குடி சாத்தையனாரை வேண்டினராம்; அய்யனாரும் அவரைக் கட்டுப்படுத்தித் தம் பரிவார தெய்வங்களுள் ஒன்றாகக் கொண்டு வந்துவிட்டாராம். இவ்வாறு பொற்பனைக்கோட்டை முனி இங்குக் காணப்படுவதற்கு வரலாறு சொல்லப்படுகிறது.

சாத்தாங்கோயிலில், சுற்று வட்டாரத்திலுள்ள பல்வேறு சிறு தெய்வங்களின் திருவுருவங்களும் காணப்படுகின்றன, கொத்தரி சோலையாண்டவர், கோவிலூர் காட்டேரி, பொற்பனைக் கோட்டை முனி என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இக்கோயிலில், காரணாகம முறைப்படி நாள் தோறும் நான்கு காலப்பூசை நடைபெறுகிறது. நான்கு காலப் பூசை நடைபெறும் அய்யனார் கோயில் இஃது ஒன்றேயாம். இங்கு ஆண்டுக்குப் பெரிய பூசை நான்கு நடைபெறுகிறது. அவையாவன சித்திரைப்பூசை, ஆடிப்பூசை, கார்த்திகைப் பூசை, தைப்பூசை என்பனவாம்.

இவையன்றி வேண்டுதலாகப் பூசையிடுதலும் உண்டு. சாத்தையனாருக்கு உயிர்ப் பலியிடுதல் கிடையாது.

திருவிழாச் சிறப்பு

சாத்தையனார் கோயிலில் சிவன் ராத்திரி வழிபாடு போலச் சிறப்பான திருநாள் பங்குனி உத்திரப் பத்து நாள் திருவிழாவாகும். இவ்விழாவில் 1, 2, 10 ஆகிய விழாக்களைக் கோனார் மரபினர் செய்து வருகின்றனர். 5ஆம் திருவிழா, கானப்பூர் சண்முகம் சேர்வை உபயம். 6, 7, 9 ஆகிய திருவிழா நகரத்தார்கள் உபயம். ஆறாம் மண்டகப்படி கடியாபட்டி (பசுமடம்) சாத்தப்ப செட்டியார்; ஏழாம் மண்டகப்படி, இராயவரம் வெ.மு. வகையார்; தேரோட்டம் இராயவரம் சிதபட குடும்பத்தார். புதுக்கோட்டை மன்னர், முகூர்த்தத் தேங்காயைத் தொட்டுக் கொடுத்த பின்னரே இங்குக் காப்புக் கட்டும் வழக்கம் ஒரு காலத்திலிருந்தது. இக்கோயிலில் பூச் சொரிதல் விழா நடைபெறுவதும் வேறெங்கும் காண முடியாதது.

ஊர்க்கோயில்களில், புரவி எடுப்பும் நடைபெறும்; அந்த பழைய மரபு இன்றும் விடாமல் இக்கோயிலில் காணப்படுகிறது. இங்குப் பூசை செய்யும் வேளார்களின் சொந்தவூர் தேக்காட்டூர்; சிவன் ராத்திரியின் போது சாமியாடி மீது சன்னதம் வந்து, தலையில் கரகம் சுமந்து வருவார்; அப்போது சுவாமி இராயவரம் போய் வெ.மு. வீட்டில் மாலை வாங்கி வருதல் நடைபெற்றது. இப்போது இப்பழக்கம் நின்றுபோய்விட்டது.

காலந்தோறும் சீரும் சிறப்புமாக வளர்ந்த சாத்தையனார் கோயில், மிகச்சிறப்பான கல் திருப்பணியாகக் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு சிவன் கோயிலைப் போல மிகச் சிறப்பாக இக்கோயிலைக் கட்டிய நகரத்தார்களின் சிறப்பே சிறப்பு.

இராயவரம் சுப.பெரியணன் செட்டியார்

"சாத்தையா துதிப்பாடல்கள்"

இந்த பதினொரு பாடல்களையும் பாடியவர் இராயவரம் சுப.பெரியணன் செட்டியார். இவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. 'சாத்தையனைப் புகழ்ந்து அவனுடைய வாசற்பன்னி வீரையன் அருள் புரிகவே' என்று ஆசிரியர் பாடலை முடிக்கின்றார். இக்கோயிலில் சாத்தையனுடைய பரிவார தெய்வமான பன்னி வீரனுக்கு வலிவு மிகுதி; இத்தெய்வமே நாட்டமான தெய்வம். அதனால் ஆசிரியர் இவ்வாறு பாடுகின்றார். நோய்களையும் ஏவல் பில்லிசூனியங்களையும் விரட்டி ஒட்டுபவராகச் சாத்தனாரும் பன்னி வீரையனும் போற்றப்படுகின்றனர். இவர்களைச் சார்ந்து பிற தெய்வங்களும் சுட்டப்படுகின்றன.

சாத்தையா காப்பு

"கொடியேவல் சூனியம் வஞ்சனைகள் பேய்பில்லி
குலவிசா மத்து ரோகம்
கொற்றவர்கள் ரோகமும் விஷவாத பாதகம்
குருவத்தி பிரும வத்தி

துடியான வறுமை பிணி அக்காணிய முதலான
சூழ்ந்திருந் தாலும், உந்தன்
சுந்தரம் விளங்குதிருச் சன்னதிவிபூ திக்கடிமை
சொல்லியே, தான்ப றக்கும்

படிபுகழ வந்திடும் அடைக்கலன் சாத்தயைன்
பண்ணிவீ ரப்ப சுவாமி
பாரமுகு முலைமலை யாவன்க ருப்பண்ணரும்
பண்மை பெறுபத்ர காளியும்

இடியேறு ரணவீர பத்திரன் சன்னாசி
வத்தினையம் கன்னி மாரும்
இவர்களெல்லாம் மனமகிழ வருசன்னிதி தனில்நின்று
என்றும்வ ளர்சாத் தையனே" (1)

விநாயகர் துதி

"சீர்கொண்ட கண்ணபுரம் அதனிலே வாழ்கின்ற
செல்வனாய் உலகை ஆளும்
திருவளரும் வடிவுடைய பேரையூர்ச் சாத்தையன்
சேவடி வணங்கி யானும்

பார்கொண்ட தமிழினால் ஆசிரியம் ஆகவே
பத்துமே பாட வேண்டிப்
பகர்பாலை அடிவிநா யகர்துணைப் பாதமும்
பண்புடன் போற்றி செய்வோம்;

பேர்கொண்ட முலைமலை யானும்வை ரவமூர்த்தியும்
பெருமை யோடு வாழும்
பேரற மகோரவீ ரபத்திர மூர்த்தியும்
பிரபலம தாய்இ ருக்கும்

வேர்கொண்ட புதுவைநகர் ராமச்சந்த் ரேந்திரன்
விரும்பியே போற்று கின்ற
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (2)

"சல்லாபம் ஆகிய அழகுகருப் பண்ணனும்
சாத்தனும் சோலைமலை யானும்
தங்கமால் உருமரும் அடைக்கலங் காத்திடும்
சாமியும் உயர்பி ரமரும்

உல்லாச முடையதிரு மலையாளி அம்மனும்
ஓங்கியழ கியநாச்சி யாரும்
உயர்ந்திடும் வடவாசல் முத்துக்க ருப்பரும்
உன்னிதக் கன்னி மாரும்

வல்லளி பேச்சியும் ராக்காசி அம்மனும்
மகிழ்சங்கி லிக்க ருப்பும்
வனசங்கி லித்தாயும் பொற்பனைக் கோட்டமுனி
வாசல்வாழ் கொம்புக் காரனும்

வில்லாளி யான்சிங்க முகக்கருப்ப பண்ணனும்
மேன்மையாய்ச் சூழ்ந் திருக்க
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (3)

சாத்தையனார் திருவழகு

"அருள்செய்அரி கரபுத்ர சாத்தையன் இருபுறம்
அம்மைபூ ரணிபுட் கலையின்
அழகுமுடை அழகும்,வடி வழகு,மணி அழகுகோ
புரம்அழகை என்ன சொல்வேன்;

சிரசினில் தங்கக்கி ரீடத்தின் அழகுவெண்
திருநுதலில் தவழும் அழகும்
சிறந்திடும் காதில் கடுக்கனும் முருக்குச்
சிவப்புவெண் முத்தின் அழகும்

பரிவுடைய மார்பில்ப தக்கம் சரப்பளி
பைம்பொன் முப்புரி நூலுமே
பளபளவென மின்னவே அடியார்க்கும் தண்ணருள்
பாலித்துக் காக்கின் றோனே!

விரிவுடைய கண்ணபுர நகர்தன்னில் வாழ்கின்ற
மெய்ஞ்ஞானத் தெய்வ மான
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே' (4)

பூசையிடும் சிறப்பு

“வருடத்தில் நாற்பூசை கொண்டிடும் வளமையை
வணக்கமா யான்சொல்லு வேனே!
மகிழ்வுதரு சித்திரை மாதமும் ஒருபூசை;
வாசமாடி ஆடி மாதம்

ஒருபூசை கொண்டுமே, கார்த்திகை மாதத்தில்
ஒருபூசை; தைத்திங் களிலும்
ஒருபூசை தான்கொண்டு உலகத்தை ஆள்கின்ற
உத்தமன்; இவைந டுவினில்

அருமையுடன் அடியார்கள் செய்கின்ற பூசைகள்
அநேகங்கள் உண்டு;அ வைகளால்
ஆண்டவன் இருமையுடன் அழகான கரகம்வைத்து
ஆடிவரு மகிமைசொல் லுவேனே;

விரிவுடைய கண்ணபுர மேவிநாள் தோறுமே
'விரும்பிஅடி யார் மகிழவே
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே (5)

கரகம் எடுக்கும் கவின்

“மலையாளி அம்மனுடைய கோயிலிற் கரகங்கள்
வைத்(து)அழகு கருப்பண் ணருமே
வாசமுள பூசாரி ஒருவர்மேல் சன்னதம்
வந்துமே நின்று கொண்டு

தலைதனில் கரகமது தானெடுத்(து), ஒருகையால்
சமுதாடு தான்பிடித்து,
தங்கவேலு பிச்சைகனி கையிலுரு மாலையும்
தான்கொண்ட பாத குறடும்

மலைகளும் கிடுகிடென அதிரவே பதினெட்டு
வாத்திய முழங்கி வரவே
வரிசையாய்ப் பாரதிகள் கும்மிகளைப் பாடவும்
மகிழ்ந்திறைவன் ஆடி வரவும்

விலையின்மதி யாக்கண்ண புரமேவ நாளுமே
வீறுடன் கீர்த்தி ஓங்க
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (6)

வழிபடுதல்

"தேமருவு தீவட்டி மத்தாப்பு வாணம்
சிறந்திடும் நாட்டி யங்கள்
சேரவே சாத்தையன் கோவிலை வலம்வந்து
தெண்டனிட்ட அழகு சொல்வேன்;

சாமியிட முன்மணித் தலைதனில் கரகமும்
தான்கொள் கைஆயு தமுடன்
சாட்டாங்க மும்,சென்று வீரபத்திர சுவாமி
தன்கோவி லில்சென் றுமே,தன்

பூமியைக் காக்கின்ற கரகமும் இறக்கியே
பொங்கமுடன் அரிய தங்காள்

புறமும் விருதாவழி கூறியே அலங்காரி
பொற்கோவில் சென்று பின்பு

. . . .

மகிமை பெற்று வாழ
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (7)

சாமி அழைத்தல்

"பூலோகம் எங்கணும் பேர்கொண்ட தெய்வமாம்
புண்ணியன் சாத்தை யனையும்
போற்றியே அடியார்கள் வாழ்த்தவே நல்வரம்
போதுமென்று அதுகொடு தீது

சாலோக சாமீப சாரூப சாயுட்சிய
சகலமோட் சமுங்கொ டுப்பதாய்த்
தரணிதனில் வந்திடும் நோய்பிணிகள் பேய்பில்லி
சஞ்சலந் தனைவிலக்க

வாலாய மாகியே பூசாரி பேரிலே
மகிழ்ந்து,சன் னதம் அழைத்து
வாய்மொழிகள் கேட்டபின் அற்பப்பி சா(சு)எல்லாம்
வாய்விட்(டு) அலறி ஓட

மேலான கண்ணபுர நகர்அதில் எந்நாளும்
வேந்தர்கள் போற்று கின்ற
மேதினிவ ணங்குசாத் தையன்வா சல்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (8)

சாமியாடி அணி பூணும் அழகு

"அங்கிகள் தரிக்கின்ற அழகைஎன் சொல்லுவேன்,
ஆனந்த மான சிரசில்
அழகான குல்லாய் அதன்மேலே பட்டமும்
அன்பான குமிழின் அழகும்

தங்கத்தி னாலேசி றந்திடும் பணிவகைகள்
சரப்பளி பதக்கம் அழகும்
தான்கொண்ட காதினில் வண்டிக் கடுக்கனும்
தழைமுருகு தொங்கல் அழகும்

பொங்கமுன் இடையில் கருங்கச்சை தொங்கலும்
பொற்சல்ல டத்தின் அழகும்
பொய்யான பேய்களை மெய்யாக ஓட்டவே
பூண்டசமு தாட்டின் அழகும்

விண்கொண்ட சோலைசூழ் கண்ணபுரம் அதனிலே
மேவிஎந் நாளும் ஓங்க
மேதினிவ ணங்குசாத் தையவன்வா சல்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே!" (9)

வரம் தருவாய்!

"உலகத்தில் உண்டான சகலத்தி ராளுமே
உனையே நினைந்திருக்க
வாழ்வினைகள் அணுகாமல் வேறுவினை வாராமல்
உண்மைஎனக் காத்த ருள்வாய்!

கலகங்கள் செய்கின்ற பேய்பில்லி சூனியம்
கரடிகள் பிடித்தாலும் உனது
கலகலெனும் மணியோசை கேட்டவுட னேபதின்
காதவழி பறந்துமே ஓடவும்

புலவர்கள் பாடவும் நீயிருந்(து) ஆடவும்
பொய்ம்மை கள்பறந்(து) ஓடவும்
பொங்கமுடன் அடியார்கள் காளாஞ்சி ஏந்தியே
போற்றிட வரம்கொ டுப்பாய்!

விலையின் மதியாக்கண்ண புரநகர் மேவியே
வீற்றிருக் கின்ற மூர்த்தி
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே (10)

விழாச் சிறப்பு

"சன்னாசி ரிஷிமார்கள் முனிபத்ர காளியும்
தனமான குதிரை அழகும்,
தலைவாசல் பூதமும் யானையும் தானேறு
தங்கக்கு றிச்சி அழகும்,

சின்னரர்கள் புகழவே சிவன்ராத் திரிபூசை
கேளிக்கை பார்க்கும் அழகும்,
கிருபையுடன் உத்திரத் திருவிழாத் தேருவரு
கெம்பீரம் என்ன சொல்லுவேன்.

மன்னர்புகழ் ராயபுரம் ஏழுநகர் வணிகரில்
வாகனாம் சுப்பிர மணியன்

மைந்தனாம் பெரியண திரச(ன்)நர் வினின்று
வரமது கொடுத்(து)அ ருள்வாய்!

மின்னிவளர் கண்ணபுர மேவியடி யார்க்(கு)அதிக
விதமுடைய பலனை உதவும்
மேதினிவ ணங்குசாத் தையன்வா சற்பண்ணி
வீரையன் அருள்பு ரிகவே" (11)

கல்வெட்டுச் செய்தி

சகாத்தம் 1561-ராட்சச ஆண்டு வைகாசித் திங்கள் 5ஆம் நாள் திருமலை சேதுபதி காத்த தேவர் அவர்கள் தருமம். பேரைச் சாத்தாவுக்குக் கண்ணங்காரக்குடி நஞ்சை புஞ்சை உட்பட முழுக்கிராமமும் ஊரும் படையும் கொடுக்கப்பட்டது.



டாக்டர் **தெ. சொக்கலிங்கம்** அழகப்பா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர்

" பாடுவார் முத்தப்பர் "

நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் அறப்பணிகளும் வரலாறும்

கும்பாபிடேகக் கிரியைகள்

கம்பன் - புறத்திணை

இந்திய இலக்கிய இறை

திருத்தல - திவ்விய தேசப் பயணம்

ஆகிய நூல்களின் ஆசிரியர். திருமாமகட்கினியன், பாலாம்பிகைதாசன் என்ற பெயர்களில் ஆன்மீகம், சமயம் சார்ந்த கட்டுரைகளை எழுதி வருகிறார்.